ஓம் ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜா
# பூஜாக்ரமம்

# Sri Saraswathi Pooja
# Poojakramam

**e-Book in Tamil**

Compiled & Published by
**Srividhya Publications, Coimbatore**

ௐ

# ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜா பூஜாக்ரமம்

(தமிழ் e-பதிப்பு)

# ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜா பூஜாக்ரமம்

# Sri Saraswathi Pooja Poojakramam

First Draft Edition - October 2020

Compiled & Published by:

**Srividhya Publications**

c/o V.Prabhakaran,
12, S.S.Layout, Veerappa Thevar Colony,
Coimbatore - 641 036.
Ph. +91 9894772245 (WhatsApp)
srividhyapublications@gmail.com

© reserved

For free private circulation only; Not for sale.

**தனிப்பட்டவர்களின் உபயோகத்திற்கு மட்டும்; விற்பனைக்கு அல்ல.**

# பதிப்பரை

நவராத்திரி விரதம் மற்றும் ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜை பாரதத்தின் பெரும்பான்மையான மக்களால் காலம் காலமாக மேன்மையாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. மக்கள் தங்கள் மொழி மற்றும் குலப் பிரிவுகளுக்கேற்ற கலாசாரத்தின்படியும், தங்கள் விருப்பங்கள் மற்றும் வசதிகளுக்கு உகந்தவாறும் மேன்மையான இந்த ஸ்ரீ நவராத்திரி விரதத்தை அனுசரித்து, ஸரஸ்வதீ பூஜையைக் கொண்டாடி பயன் அடைகிறுர்கள்.

ஸ்ரீ நவராத்திரி விரதம் மற்றும் ஸரஸ்வதீ பூஜை பற்றி பல புத்தகங்களும், இன்டர்நெட்டில் பல பதிப்புகளும் மக்களின் சந்தேகங்களைத் தீர்த்து அனைவரும் பூஜையை நன்கு நடத்த உதவுகின்றன. பொதுவாக பூஜையைப் பற்றியும், வ்ரதத்தை அனுஷ்டிப்பதைப் பற்றியும் பூஜையை நடத்துவதைப் பற்றியும் அனைவரும் அறிந்து உள்ளனர்.

ஆயினும் நாம் கண்ட பல புத்தகங்களில் மற்றும் இன்டர்-நெட் பதிப்புகளில் பூஜை மந்த்ரங்களும், உபசார ப்ரயோகங்களும், விவரங்களும் முழுமையாக அறிய இயலாமல் சுருக்கமாகவே தரப் பட்டுள்ளன. தவிர சிலவற்றில் சரியான ஸ்ம்ஸ்க்ருத உச்சரிப்புகளை அளிக்காமலும், சிலவற்றில் பூஜை மந்த்ரங்கள் மிகமிகச் சுருக்கமாகவும் தரப்பட்டுள்ளன. பூஜையை விரிவாக மற்றும் முழுமையாக நடத்த விரும்பும் எங்களைப் போன்ற பலருக்கு மேற்படி பதிப்புகள் உதவுவது இல்லை என்பது எங்களது எண்ணம். மேலும் தற்காலத் தில் வீட்டில் உள்ள ஒருசில பெரியவர்களுக்கே பூஜைகள் பற்றிய விவரங்களும் விளக்கங்களும் சரியாகத் தெரியாத நிலையில், அடுத்து வரும் தலைமுறையினருக்கு அவர்கள் படிக்கும் பதிப்புகளையே விவரங்களுக்கு நம்ப வேண்டி இருக்கும்.

ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜை மற்றும் இதர பூஜைகள் பற்றிய பல புத்தகங்கள் மற்றும் இன்டர்நெட் பதிப்புகளை ஆராய்ந்து, அனைவரும் பூஜையை சிறப்பாக அனுஷ்டிக்க உதவும் வகையில் **ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜா பூஜாக்ரமம்** என்கிற இந்த நூலை வரைவுப்

பதிப்பாக (Draft Copy) தொகுத்துள்ளோம். அதிக நூல்களில் அமையப் பெற்ற மந்த்ர வார்த்தைகள் மற்றும் உபசாரப் ப்ரயோகங்களுடன் இங்கே பதிப்பித்துள்ளோம். முக்கியமாக ஸ்மார்த்தர்கள் எனப்படும் தமிழ் நாட்டு ப்ராமண பிரிவினர் அனுஷ்டிக்கும் முறையில் இந்த நூல் அமைக்கப்பட்டு உள்ளது. மற்ற பிரிவினர் இந்நூலை தேவையான மாற்றங்களுடன் பயன்படுத்தலாம்.

இந்த நூல் வேதம் மற்றும் சாஸ்த்ரங்களை முறைப்படி கற்க இயலாத எங்களைப் போன்றவர்களுக்கும், மற்றும் தாங்களாகவே சரியாக பூஜை செய்ய விழைபவர்களுக்கும் மிகவும் உபயோக மாகும் என நம்புகிறோம். Smartphone/Tab ஆகியவற்றில் எளிதாக உபயோகிக்கும் வகையில் இந்த புத்தகம் e-Book ஆக, மந்த்ரங்கள் மற்றும் ப்ரயோகங்கள் பெரிய எழுத்துக்களில் எளிதாக படிக்கும் வகையில் பதிப்பிட்டு உள்ளோம். விரும்புகிறவர்கள் A-5 size-ல் ப்ரிண்ட் செய்து கொள்ளலாம்.

இதைப் படிக்கும் மற்றும் உபயோகிக்கும் அன்பர்கள் இந்த நூலில் சேர்க்க வேண்டிய மற்றும் மாற்ற வேண்டிய விவரங்கள் மற்றும் குறைகளைத் தெரிவித்தால், அனைவருக்கும் பயன்படும் வகையில் தேவையான மாற்றங்களுடன் இந்த நூலை இறுதிப் படுத்தி மீண்டும் இலவச e-Book ஆக வெளியிட மிகவும் உதவியாக இருக்குமென வேண்டுகிறோம். இதில் காணும் விவரங்கள் அறியப்பட உதவிய பல பதிப்புகளை உருவாக்கிய மேன்மையான ஆசிரியர் களுக்கு எங்களது உளமார்ந்த நன்றிகள். இந்த நூலின் பெருமைகள் அவர்களின் பாதங்களுக்கு சமர்ப்பணம்.

அன்புடன் இறைவன் பணியில்,

பதிப்பாசிரியர் குழு

# ஸரஸ்வதீ பூஜை விவரங்கள்

*சகல வித்வத்களுக்கும் வித்தைகளுக்கும் அதிபதியான ஸ்ரீ ஸரஸ்வதீ தேவிக்காக நவராத்திரி விழாவில் கடைசி மூன்று நாட்களை அர்பணித்து பூஜை செய்து கொண் டாடுவது பாரதத்தில் முக்கியமாக தமிழ் நாட்டில் வழக்கமாக உள்ளது. கல்வி அறிவும் தொழில்களும் சிறக்க மானுடர்க்கு உறுதுணையாகும் ஸ்ரீ ஸரஸ்வதீ தேவியை ஒரு நாளாயினும் சிறப்புடன் பூஜித்து அவரது அருளைப் பெற்று வாழ்வில் அனைத்து சௌபாக்யங்களையும் ஐஸ்வர்யங் கயையும் பெற நம் முன்னோர்கள் வகுத்துக் கொடுத்து உள்ளதே ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜையாகும்.*

*ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜையையும் நவராத்திரி விழாக்களையும் நம் பாரத மக்கள் தங்கள் மொழி மற்றும் குலப் பிரிவுகளுக்கேற்ற படியும் தங்கள் கலாசாரத்தின்படியும் பல விதமாக அனுசரித்து கொண்டாடுகின்றனர். இவை பற்றி பல புராண கதைகளும் விளக்கங் களும் உள்ளன. தமிழ் நாட்டில் இந்த ஒன்பது நாட்களை சக்தி, செல்வம், மற்றும் ஞானத்திற்கு அதிபதிகளான பார்வதீ, லக்ஷ்மீ மற்றும் ஸரஸ்வதீ ஆகிய தெய்வங்களுக்கு ஒருங்கே அர்பணித்து,* ***ஸ்ரீ துர்கா-லக்ஷ்மீ-ஸரஸ்வதீ பூஜை****யாக இல்லங்களிலும் கோயில்களிலும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு நாளும் தேவிகளின் ஒவ்வொரு ரூபமாக வணங்கப்படுகிறது. நவராத்திரியில் கொலு வைத்து அனைத்து தெய்வங்களை பூஜிப்பதுவும் பலருக்கு வழக்கமாக உள்ளது. அலுவலகங்களிலும், தொழிலகங்களிலும் ஸ்ரீ ஸரஸ்வதீ மற்றும் ஆயுத பூஜையாக கொண்டாடப்படுகிறது.*

*நவராத்திரியில் ஒன்பது நாளும் ஸாஸ்த்ர ஸம்ப்ரதாய மாக பூஜை செய்பவர்கள் முதல் நாளிலேயே துர்கா லக்ஷ்மீ ஸரஸ்வதீ தேவிகளை ஒன்ருக ஆவாஹனம் செய்து தினமும் பூஜை செய்வார்கள். அல்லது முதல்நாள் துர்கை, 4ம் நாள் லக்ஷ்மீ, 7ம் நாள் ஸரஸ்வதீ எனவும் ஆவாஹனம் செய்கிருர்கள். சிலர் கொலு வைத்து தினமும் கொண்டாடினுலும், ஸம்ப்ரதாயமாக 7ம் நாளன்று ஸரஸ்வதி ஆவாஹனம் செய்து 4 நாள் பூஜை செய்வார்கள். ஆனுல் ஒரு நாள் மட்டுமே ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜையாக கொண்டாடுவதே பொதுவாக தமிழ்நாட்டில் பலமக்களுக்கு வழக்கமாக உள்ளது.*

ஒரு நாள் மற்றும் மூன்று நாட்கள் மட்டும் ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜையாக விரிவாகக் கொண்டாடுபவர்களுக்காக இந்த ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜா பூஜாக்ரமம் என்ற நூல் தமிழில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நூலைப் பயன்படுத்துபவர்களுக்கான சில முக்கிய விவரங்களைக் கீழே பகிர்ந்துள்ளோம்.

♦ ஒரு நாள் பூஜை செய்பவர்கள் ஒவ்வொரு ஆண்டும் சந்திர கதியின்படி வரும் சாந்த்ரமான ஆஶ்வயுஜ மாதத்தில் நவராத்திரியின் 9-ம் நாள் முற்பகலில் நவமி திதி இருக்கும் பொழுது ஸரஸ்வதீ தேவியை ஆவாஹநம் செய்து பூஜை செய்ய வேண்டும். தமிழ் மாதங்களைக் கணக்கிட்டால் புரட்டாசி அல்லது ஐப்பசி (கன்யா/ துலா) மாதத்தில் பூஜைநாள் வரும். சில வருடங்களில் திதி மாறுதல் களால் நாள் கணக்கு மாறுபடலாம். பஞ்சாங்கப்படி பூஜை நாளை அறியவும்.

♦ மூன்று நாள் பூஜை செய்பவர்கள் நவராத்திரியின் 7-ம் நாள் முற்பகலில் ஸப்தமி திதி இருக்கும் பொழுது ஸரஸ்வதீ தேவியை ஆவாஹநம் செய்து பூஜை செய்ய வேண்டும். சில வருடங்களில் திதி மாறுதல்களால் நாள் கணக்கு மாறுபடலாம். பஞ்சாங்கப்படி பூஜை நாளை அறியவும்.

♦ மூன்று நாள் பூஜை செய்பவர்கள் அடுத்து வரும் 3 நாட் களிலும் விரிவாகவோ சுருக்கமாகவோ பூஜை செய்து 10-ம் நாள் விஜயதசமியன்று புநர் பூஜைக்குப்பின் விஸர்ஜனம் செய்ய வேண்டும். ஒரு நாள் மட்டும் பூஜை செய்பவர்கள் 10-ம் நாள் புநர் பூஜைக்குப் பின் விஸர்ஜனம் செய்யவேண்டும்.

♦ பொதுவாக தேவியைக் கலஸத்திலோ அல்லது புஸ்தக கோஸத்திலோ ஆவாஹநம் செய்து பூஜை செய்ய வேண்டும். புஸ்தக மண்டலத்துடன் கலஸமும் வைத்து பூஜை செய்வதும் வழக்கமாக உள்ளது. விஸர்ஜநம் செய்ய வேண்டியுள்ளதால், பொதுவாக பிம்பங்கள் மற்றும் சித்திரங்களை (படங்கள்) பூஜையில் வைத்தாலும் அவற்றில் ஆவாஹநம் செய்வதில்லை எனத் தெரிகிறது.

♦ ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜையானலும், நவராத்திரியின் அங்கமாக உள்ளதால், துர்கா லக்ஷ்மீ ஸரஸ்வதீ ஆகிய மூன்று தேவிகளையும் ஒன்றுக ஆவாஹனம் செய்வதே வழக்கம்.

♦ ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜை நாளில், வீட்டை சுத்தம் செய்து, பூஜை மேடையில் அல்லது பலகையில் மாக்கோலம், செம்மணிட்டு, பூஜை செய்ய புஸ்தக கோஸத்தில் விரும்பும் புத்தகங்கள், எழுது பொருட்கள், அலுவலக உபகரணங்கள் (லேப்டாப் போன்றவை), ஆயுதங்கள் முதலியவற்றை அடுக்கி, சந்தன குங்குமம் இட்டு பூஜைக்கு தயார் செய்து கொள்ளவும். விரும்பினுல் அல்லது வழக்கமிருந்தால் கலஸமும் தயார் செய்து கொள்ளவும். வீட்டிலுள்ள மற்ற பிம்பங்களையும் படங்களையும் பூஜையில் சேர்த்துக் கொள்ளலாம். விரும்பினுல் மேடை அல்லது மண்டபம் அமைத்துக் கொள்ளலாம். ஆயுத பூஜையின் அங்கமாக வாகனங்கள், இயந்திரங்கள், தவிர நாம் உபயோகிக்கும் உபகரணங்களையும் பூஜையில் சேர்த்துக்கொள்வது நம் மரபு.

♦ கலஸம் வைத்து பூஜை செய்பவர்கள், மற்ற பூஜைகளில் தயார் செய்வதுபோல நீர் நிரப்பியோ, பச்சரிசி முதலான தான்யங்களை நிரப்பியோ கலஸத்தை தயார் செய்து கொள்ளலாம். தட்டு அல்லது இலையில் பச்சரிசியைப் பரப்பி, கலஸத்தை வைத்து பூஜை செய்யவும்.

♦ சாஸ்த்திரமாக பூஜை செய்பவர்கள், ப்ரஸாதங்களை மடியாகத் தயார் செய்து, பூஜையன்று விரதமிருந்து மடியாக பூஜை செய்வது விசேஷமானது. இந்த விஷயத்தில் அவரவர்கள் தனிப்பட்ட விருப்பமே ப்ரதானம்.

♦ ஸரஸ்வதீ மற்றும் நவராத்திரிபூஜைகளுக்கான விசேஷ ப்ரஸாதங்கள் பற்றிய விவரங்கள் பல பதிப்புகளில் காணப்படுகின்றன. பொதுவாக சர்க்கரை பொங்கல் (அ) வெல்ல பாயஸம், எலுமிச்சை சாதம், சாதம், அப்பம்(அ)சூய்யம், சுண்டல், பழங்கள் சொல்லப்படுகின்றன. குடும்ப வழக்கப்படி தயார் செய்து கொள்ளவும். ப்ரஸாதங்களின் ஸம்ஸ்க்ருத பெயர்கள் பக்கம் 114-116-ல் கொடுக்கப்பட்டு உள்ளன.

♦ பூஜையில் அங்கமாக ஸரஸ்வதீ அஷ்டோத்ர சதநாமாவளி அர்ச்சனை இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. விரும்புவர்கள் லக்ஷ்மீ மற்றும் துர்கா அஷ்டோத்ர சதநாமாவளிகளையும் கூறி அர்ச்சனை செய்யலாம். லக்ஷ்மீ மற்றும் துர்கா அஷ்டோத்ரங்கள் புத்தகத்தின் கடைசியில் பக்கம் 119-128-ல் கொடுக்கப்பட்டு உள்ளன. சிலருக்கு ஸஹஸ்ரநாம அர்ச்சனைகளாக செய்வதும் வழக்கமாக உள்ளது.

♦ மாலையில் விளக்கேற்றி, பாடல்கள் மற்றும் ஸ்தோத் திரங்களைச் சொல்லி தேவியை ஆராதித்து, குறைந்தது பழங்களை யாவது நிவேதநம் செய்து, ஆரத்தி பாடல்களைப்பாடி பெண்கள் ஆரத்தி எடுத்து பூஜையை முடிக்க வேண்டும். பலருக்கு தேவி பாகவதம் படிக்கும் வழக்கமும் உண்டு.

♦ மறுநாள் காலை அல்லது முற்பகலில் புனர்பூஜையை செய்ய வேண்டும். விரிவாக பூஜையை செய்ய இயலாவிடில், இங்கு கொடுத்துள்ள மந்திரங்களின்படி புனர்பூஜையை சுருக்கமாகச் செய்யலாம். தேவிக்கு ஒருமுறை விரிவாக பூஜை செய்துள்ளதால், புனர்பூஜையை ஒருசில புத்தகங்களில் உள்ளபடி மிகச்சுருக்கமாக செய்து தேவியை யதாஸ்தானம் செய்தாலும் தவறில்லை என சொல்லப்படுகிறது. ஆனால் புனர் பூஜையைச் சுருக்கமாகவாவது செய்து தேவியை யதாஸ்தானம் செய்வது கட்டாயம். தேவியை யதாஸ்தானம் செய்தபிறகு புஸ்தக கோசத்தைக் கலைத்து, சிறிது நேரமாவது படிப்பதும், பாடுவதும், புதியன கற்பதும், வாத்யங்களை இசைப்பதும் பல குடும்பங்களில் வழக்கமாக உள்ளது.

♦ மறுநாள் விஜயதசமியன்று தனியாக பூஜை எதுவும் இல்லை. பல குடும்பங்களில் சிறிய குழந்தைகளுக்கு ஆசார்யர் வைத்து பூஜை செய்து அச்சராப்யாஸம் செய்விக்கும் வழக்கம் உண்டு. தொழிலகங்கள் மற்றும் அலுவலகங்களில் சிலர் அன்று தனியாக ஆயுதபூஜையை நடத்துவதும் உண்டு.

♦ நவராத்தியின் அங்கமாக கன்யா பூஜை/ஸுவாஸினி பூஜை நடத்துவது பலருக்கு வழக்கம். விரும்புகிற வர்கள் தங்கள் குல/குடும்ப வழக்கப்படி செய்து கொள்ளலாம். பூஜை செய்யாவிடினும் கன்யா குழந்தைகள் மற்றும் சுமங்கலிகளை அழைத்து, மரியாதைகள் செய்து, போஜனம் செய்வித்து, பரிசுகள் வழங்குவதை பலரும் பின்பற்றுகிறார்கள்.

♦ பூஜைக்குத் தேவையான பொருட்கள் மற்றும் பாத்திரங் களின் விவரம் பக்கம்117-118-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

♦ பூஜைக்கு முன்பாக புத்தகத்தை ஒருமுறை படித்து வைத்துக் கொள்வது பூஜையை சிறப்பாக செய்ய உதவும்.

********

# ஸம்ஸ்க்ருத உச்சரிப்பு விளக்கங்கள்

நமது வேதம் மற்றும் பூஜை மந்த்ரங்கள், ப்ரயோகங்கள் ஸம்ஸ்க்ருத மொழியில் உள்ளதால், அந்த மந்த்ரங்களை ஸம்ஸ்க்ருத மொழி அமைப்பின்படி உச்சரிப்பது மிகவும் உகந்தது. அதனால் தமிழ் மட்டுமே எழுத்து மொழியாக அறிந்த பலருக்கு உபயோகப் படும் வகையில் பூஜை மந்த்ரங்களை தமிழ் எழுத்துக்களில் பதிவிடுவது அவசியமாகிறது.

தமிழில் ஸம்ஸ்க்ருத மந்த்ரங்களையும் ஸ்லோகங்களையும் இதுவரை பதிப்பிக்க பலவித முறைகள் பயன்பாட்டில் உள்ளன. அவற்றை ஆராய்ந்து, சிலநாள் பழக்கத்தில் அனைவரும் எளிதாக பயன்படுத்தும் வகையில் பொருத்தமான தமிழ் எழுத்துக்களின் அச்சுக்களையும்(fonts) மற்றும் குறிகளையும் கீழ்க்கண்ட முறையில் உபயோகப்படுத்தி எங்களது புத்தகங்களைப் பதிப்பித்து வருகிறோம்.

நாங்கள் பயன்படுத்தியுள்ள இந்த அச்சுமுறை மற்றும் பயன்பாட்டு விவரங்கள் நூலின் அடுத்துவரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. சில வருடங்களாக எங்களால் பயன்படுத் தப்பட்டு வரும் இந்த புதியமுறை, சிலநாள் உபயோகத்தில் மற்றும் பயிற்சியில், ஸம்ஸ்க்ருத உச்சரிப்புகளை மற்ற முறைகளைவிட எளிதாகப் பயன்படுத்த உதவும் என்பது எங்களது அனுபவம்.

முடிந்தவரை ஸம்ஸ்க்ருத எழுத்துக்களின் சரியான உச்சரிப்பு களுக்கு இணையான உச்சரிப்புகளை உடைய தமிழ் எழுத்துக் களின் அச்சுக்களையே(fonts) உபயோகப்படுத்தியுள்ளோம். தமிழிலிருந்து மாறுபட்ட உச்சரிப்புகளை உடைய ஸம்ஸ்க்ருத எழுத்துக்களை குறிக்க வித்தியாசமான தமிழ் எழுத்துக்களின் அச்சுக்களை(fonts) மற்றும் குறிகளை பின்வரும் அட்டவணையில் உள்ள முறையில் உபயோகப்படுத்தியுள்ளோம். இவ்வகையான புதுவகை தமிழ் அச்சுக்களின் மூலம் சரியான ஸம்ஸ்கிருத உச்சரிப்புகள் சில முறை முயன்று படிப்பவர்களுக்கு எளிதாகப் பாடமாகும் என நம்புகிறோம்.

## 1. ஸம்ஸ்க்ருத எழுத்துக்களுக்கான தமிழ் எழுத்து அச்சுக்கள்

உதாரணமாக தமிழில் **க** (ka) என்ற ஒரு எழுத்துதான் உள்ளது. ஆனால் ஸமஸ்க்ருதத்தில் **क ख ग घ** என்ற நான்கு வகை **க** (ka) உச்சரிப்புகள் மற்றும் எழுத்துக்கள் உள்ளன. இந்த உச்சரிப்பு களைச் சரியாக அறியும் வகையில் முறையே **க**, **²க**, க ³க என்ற நான்கு வகையான அச்சுக்களை(fonts) பயன்படுத்தியுள்ளோம். ² மற்றும் ³ ஆகிய prefix-ஐ **க** மற்றும் க எழுத்துக்களுடன் பயன்படுத்தும் பொழுது, **ख, घ** ஆகிய எழுத்துக்களுக்கான சரியான உச்சரிப்பு எளிதாக அமைகிறது.

இதே போல் **ச, ட, த, ப** என்ற மற்ற நான்குவகை உயிர்-மெய் எழுத்துக்களுக்கும் மேற்கண்டவாறு நான்கு வகையான அச்சுக்களை(fonts) உபயோகப்படுத்தியுள்ளோம். ஸம்ஸ்க்ருதத் திற்கே உரிய **श ष स ह क्ष श्री** என்கிற எழுத்துக்களுக்கு முறையே தமிழில் நடைமுறையில் உள்ள **ஶ, ஷ, ஸ, ஹ, க்ஷ, ஸ்ரீ** என்கிற தமிழ் அச்சுக்களைப் பயன்படுத்தியுள்ளோம்.

ஸம்ஸ்க்ருதத்தில் **எ, ஒ, ழ, ற, ன** ஆகிய எழுத்துக்கள் மற்றும் உச்சரிப்புகள் கிடையாது. ஆகையால் இந்த எழுத்துக்களைப் பயன்படுத்தவில்லை.

## 2. சிறப்பு எழுத்துக்கள் மற்றும் குறிகள்

ஸம்ஸ்க்ருதத்திற்கே உரிய **ऋ ॠ ऌ ॡ** என்கிற உயிர் எழுத்துக்களுக்கு முறையே தமிழில் நடைமுறை வழக்கில் எழுத்துக்கள் எதுவும் இல்லை. அவற்றிற்கு முறையே **ரு, ரூ, ளு, ளூ** என்கிற தமிழ் அச்சுக்களை உபயோகித்துள்ளோம். அவை மெய்யெழுத்துக்களுடன் இணைந்து வரும்பொழுது, ரு, ரூ, ளு, ளூ என்கிற அச்சுக்களை suffix-ஆகப் பயன்படுத்தியுள்ளோம். **க்+அ=க** என்பது போல் **க்+ரு=க்ரு** . **க்**, ரு ஆகிய இரண்டு எழுத்துக்களையும் சேர்த்து **க்ரு** என ஒன்ருக ஒரே எழுத்தாக உச்சரிக்க வேண்டும். உதாரணம்: **க்ருஷ்ணு, ந்ருணாம், க்ருணாண, க்ளுப்த, த்ருஷ்டி.**

*ऽ என்ற குறி தொக்கி நிற்பதைக் குறிக்கிறது. (ऽ-அ; ऽऽ-$^{அ}$அ). சந்திரப்பிறையுடன் கூடிய ꣳ என்ற இந்த எழுத்துக்கு 'க்ம்' என்று கொடுத்துள்ளோம். விசர்கம்(:),* comma(।) , full stop(॥) *ஆகிய மற்ற ஸம்ஸ்க்ருத குறிகளுக்கு கம்ப்யூட்டரில் சாதகமான முறையில் வரும் அச்சுக்குறிகளைப் பயன்படுத்தி உள்ளோம்.*

## 3. ஸ்வரக் குறிப்புகள்

*பல ஸம்ஸ்க்ருத மந்த்ரங்களிலும் ஸ்லோகங்களிலும் ஸ்வரங்களுக்கான குறிகள் காணப்படும். எங்கள் புத்தகங்களில் ஸ்வரம் பற்றிய குறிகளை, எங்களுக்குக் கிடைத்த நூல்களில் உள்ளபடி நாங்கள் கொடுத்துள்ளோம். அனைத்து மந்த்ரங்களுக்கும் முழுவது மாக எங்களுக்கு குறிப்புகள் கிடைக்கவில்லை. ஸ்வரம் பற்றிய குறிகள் குறித்த விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் மந்த்ரங்களை நன்கு பாடம் செய்ய விரும்புபவர்கள், இதனை வேதம் மற்றும் ஸம்ஸ்க்ருதம் நன்கறிந்த வித்தகர்களிடம் கற்றுத் தெரிந்து கொள்வது நல்லது. கம்ப்யூட்டரில் எங்களுக்கு எளிதாக பயன்படுத்தும் வகையில் ஸ்வர குறிகளை அமைத்துள்ளோம். மற்றவர்களின் பதிப்புகளில் குறிகள் மாறுபடும்.*

### உதாத்தம்:

*எந்தக் குறியும் இடப்படாமல் உள்ள எழுத்துக்களை நடுநிலையாக சாதாரணமாக உச்சரிக்கவும்.*

### அனுதாத்தம்:

*கீழே கோடு இடப்பட்ட எழுத்துக்களை சற்று இறக்கி உச்சரிக்கவும். (உதாரணம் -* **வரு<u>ணேஹ</u>** *போத்தி -யில்* **<u>ண</u>** *)*

### ஸ்வரிதம்:

*எழுத்துக்கு மேல் 1 என குறியிடப்பட்ட எழுத்தை சற்றுத்* **தூக்கி** *உச்சரித்து உடனே இறக்க வேண்டும். (உதாரணம் -* **ப்ர்$^{1}$கோ தேவஸ்$^{1}$ய த்தீமஹி** *-யில் $^{1}$கோ மற்றும்* **$^{1}$ய** *)*

## தீர்க்க ஸ்வரிதம்:

*எழுத்துக்கு மேல் 2 என குறியிடப்பட்ட எழுத்தை நன்கு* **மேலே தூக்கி** *நீட்டி உச்சரிக்க வேண்டும். (உதாரணம்-* **ப்ரசோத$^{2}$யாத்** *-ல்* **$^{2}$யா** *மற்றும்* **ர$^{2}$த்தேப்யோ நம:** *-வில்* **$^{2}$த்தே** *)*

*கடைசி இரண்டு குறிகளும் உச்சரிக்க வசதியாக அந்தந்த எழுத்தின் தொடக்கத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளன.*

*பின்வரும் அட்டவணையில் ஸம்ஸ்க்ருத எழுத்துக்கள் மற்றும் அவற்றிற்கான பயன்படுத்தப்பட்டுள்ள தமிழ் அச்சுக்கள் (fonts) கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு நிகரான உச்சரிப்புகள் ஆங்கிலத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் குறிப்பிட்ட எழுத்துக் களுக்கான ஓரளவு சரியான உச்சரிப்புகளை உடைய தமிழ் வார்த்தைகளும் உதாரணத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த விவரங்கள் அனைவருக்கும் முடிந்தவரை ஸம்ஸ்க்ருத வார்த்தைகளை சரியான உச்சரிப்புடன் சொல்ல உதவும் என நம்புகிறோம்.*

*எனினும் ஸம்ஸ்க்ருத எழுத்துக்களின் சரியான உச்சரிப்பு கள் தமிழ் மற்றும் ஆங்கில எழுத்துக்களின் உச்சரிப்பிலிருந்து மாறு பட்டது என்பதனை அனைவரும் உணர்ந்து, சரியான ஸம்ஸ்க்ருத உச்சரிப்புகளை மொழி அறிந்தவர்களிடம் கேட்டு அறிந்து, பின் தமிழில் உள்ள ஸம்ஸ்கிருத மந்த்ரங்களையும் ஸ்லோகங்களையும் படிப்பது பயனளிக்கும்.*

********

சம்ஸ்க்ருத எழுத்துக்களுக்கான தமிழ் எழுத்து அச்சுக்கள்–(fonts)
Sanskrit Alphabets and Representative Tamil Fonts used

உயிர் எழுத்துக்கள்:

अ आ इ ई उ ऊ ऋ ॠ
அ ஆ இ ஈ உ ஊ ரு ரூ

ए ऐ ओ औ अं अः ऌ ॡ
ஏ ஐ ஓ ஔ அம் அஹ ளு ளூ

மெய் எழுத்துக்கள்:

क ख ग घ ङ च छ ज झ ञ
க க்க க க்க ங ச ச்ச ஜ ஜ்ஜ ஞ

ट ठ ड ढ ण त थ द ध न
ட ட்ட ட ட்ட ண த த்த த த்த ந

प फ ब भ म
ப ப்ப ப ப்ப ம

य र ल व श ष स ह
ய ர ல வ ஶ ஷ ஸ ஹ

சிறப்பு எழுத்துக்கள் மற்றும் குறிகள்:

श्री क्ष ज्ञ ॐ ऽ ँ ꣳ : । ॥
ஸ்ரீ க்ஷ ஜ்ஞ ஓம் ऽ ம் க்ம் : । ॥

எண்கள்:

१ २ ३ ४ ५ ६ ७ ८ ९ ०
1 2 3 4 5 6 7 8 9 0

*******

## தமிழ்–சம்ஸ்க்ருத அச்சுக்கள் (fonts) & உச்சரிப்பு விளக்கங்கள்

Order: Sanskrit Alphabet - English Notation- Tamil Font used -sample Tamil word

क - ka$_h$ - க - கடவுள்

ख -$^k$ka$_h$ - ்க - கட்சி

ग - ga$_h$ - க - ராகம்

घ - $^g$ga$_h$ - ்க - கம்பீரம்

च - ca$_h$ - ச - சரணம்

छ - $^c$ca$_h$- ்ச - சாயா

ज - ja$_h$ - ஜ - ஜலம்

झ - $^j$ja$_h$ - ்ஜ - ஜாங்கிரி

ट - ta$_h$ - ட - இஷ்டம்

ठ - $^t$ta$_h$ - ்ட - கடினம்

ड - da$_h$ - ட - குடம்

ढ - $^d$da$_h$ - ்ட- மூடன்

त - tha$_h$ - த - தனிமை

थ - $^t$tha$_h$ - ்த - பித்தம்

द - dha$_h$ - த - பாதம், தநம்

ध -$^d$dha$_h$ - ்த - ராதா

प - pa$_h$ - ப - பழம்

फ - $^p$pa$_h$ - ்ப - பலன்

ब - ba$_h$ - ப - இன்பம்

भ - $^b$ba$_h$ - ்ப - பயம் :

*******

श - $^s$ca$_h$ - ஶ -சங்கு,சிவம்

ष - $^s$sha$_h$ - ஷ -புஷ்பம்

स - $^s$sa$_h$ - ஸ -ஸரஸ்வதி

ह - ha$_h$ - ஹ - ஹாரம்

क्ष -k$^s$sha$_h$- க்ஷ- க்ஷ - பக்ஷி

ज्ञ -$^j$j$^g$na$_h$-ஜ்க்ஞ-ஜ்ஞ- யஜ்ஞம்

श्री - shri - ஸ்ரீ -ஸ்ரீதரன்

ऋ - $^r$ru-்ரு- ரு -ரு- ருஷி,

ॠ - $^{ir}$ru$_u$ - ்ரூ -ரூ- ரூ

ल - la$_h$ - ல - கலகம்

ळ - $^l$La$_h$ - ள - உள்ளம்

ऌ - $^l$Lu - ள்ளு - ளு ளு

ॡ - $^{il}$Lu$_u$ - ள்ளூ - ளூ ளூ

ँ - igum - ம்ம் - ஓம்ஸத்யம்

ॐ - aum - ஓம் - ஓம்

குறிகள் தொக்கி நிற்பது:

ऽ - a - ऽ - அ

ऽऽ - aa - ऽऽ - அஅ

: - : - : - ஹ்அ

*******

# ஸ்ரீ ஸரஸ்வதீ பூஜா பூஜாக்ரமம்

## (பூஜை செய்யும் முறை)

பூஜைக்கான புஸ்தக கோஸத்தை/ கலஸத்தை மற்றும் பூஜை த்ரவியங்களை மேலே கூறியபடி தயார் செய்து கொண்டு, அனைவரும் கை, கால் அலம்பிக் கொண்டு சுவாமியை, பெரியவர்களை நமஸ்காரம் செய்துவிட்டு பூஜைக்கு அமரவும். விரிவாக அனைத்து உபசாரங்களையும் மந்த்ரங்களையும் கூறி பூஜையைச் செய்ய வேண்டும். ப்ரஸாதங்களை இயன்றவரை ஆசாரத்துடன் தயார் செய்து நிவேதநம் செய்ய வேண்டும். ஒருவர் ப்ரதானதாக வீட்டில் அனைவருடன் இணைந்து பூஜையைச் செய்ய வேண்டும். ப்ரதானமாக ப்ரஹ்மசாரி பையனும் பூஜையைச் செய்யலாம்.

முதலில் தயார் செய்துள்ள மஞ்சள் பிள்ளையாருக்கு ஸ்ரீ விக்நேஸ்வர பூஜை. ஒரு பித்தளை அல்லது வெள்ளித் தட்டில் மஞ்சள் பிள்ளையாரை வைத்துக் கொள்ளவும். வேறு ஒரு பித்தளைத் தட்டில் உடைத்த தேங்காய், 4/5 வெற்றிலை, இரண்டு பழம், இரண்டு பாக்கு, சிறிய வெல்லக் கட்டி ஆகியவற்றை எடுத்து வைத்துக் கொள்ளவும். பூஜை செய்பவருக்கு மற்றவர் மந்திரங்களைப் படித்து உதவலாம்.

மணியை அடித்து, விளக்கை ஏற்றி பூஜையை ஆரம்பிக்கவும். பூஜை செய்பவர் இருமுறை ஆசமனம் செய்து கொள்ளவும். பெண்கள் பூஜை செய்தால் கோவிந்தாய நம வரை சொல்லவும். அங்கவந்தநமும், ப்ராணாயாமமும் கிடையாது.

ஆண்கள் ஆசமனம் செய்தபின், காலடியில் 2 தர்பங்களைப் போட்டுக்கொண்டு, 2 புல் பவித்ரம் அணிந்து, 2 கட்டை தர்பங்களை பவித்ரத்துடன் சேர்த்து வைத்துக்கொண்டு ஸங்கல்பம் செய்யவும். ஸங்கல்பம் முடிந்தபின் கட்டை தர்பங்கள் விஸர்ஜனம். பவித்ரம் பூஜை முடியும்வரை அணிந்திருக்க வேண்டும். ஸ்ரீ விக்நேஸ்வர பூஜை ஆரம்பம்.

# 1. ஸ்ரீ விக்நேஸ்வர பூஜை

## 1.1. ஆசமநம், அங்கவந்தநம்

ஓம் | அச்யுதாய நம: |
அநந்தாய நம: |
கோவிந்தாய நம: |
கேஶவ, நாராயண, மாத்4வ, கோவிந்த, விஷ்ணோ,
மது4ஸூதந, த்ரிவிக்ரம, வாமந, ஸ்ரீத4ர, ஹ்ருஷீகேஶ,
பத்மநாப4, தாமோதர ||

## 1.2. பூஜை ஆரம்பப் பிரார்த்தனை

*மணியைஅடித்து, கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு பூஜையை ஆரம்பிக்கவும். பவித்ரம் அணிந்து கொள்ளவும்.*

ஓம் த்4ருவந்தே ராஜா வருண,
ஓம் த்4ருவந்தேவோ ப்3ருஹஸ்பதி: |
த்4ருவந்த இந்த்3ரஶ் சாக்3நிஶ்ச
ராஷ்ட்ரந்தா4ரயதாந்-த்4ருவம் |
பர்வத இவா விசாலி:
இந்த்3ர இ வேஹ த்4ருவஸ்திஷ்ட
இஹராஷ்ட்ரமுதா4ராய அபிதிஷ்ட ப்ரதந்யத: |
அத்4தரே ஸந்து ஸத்ரவ:
இந்த்3ர இவ வ்ருத்3ருஹாதிஷ்ட: |
தேவீம் வாசமஜநயந்த தேவா: |
தாம் விஶ்வரூபா பஶவோ வதந்தி |

ஸாநோ மந்த்ரேஷு மூர்ஜந்துஹாநா |
த்தேநுர் வாகஸ்மாநு: | பஸுஷ்டுதைது |
ஶுப்பமுஹுர்தோஸ்து | ஸுப்ரதிஷ்ட்டிதமஸ்து ||

## 1.3. குரு, குல தேவதை த்யாநம்

*கை கூப்பி கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லவும்.*

குரு: ப்ப்ரஹ்மா: குரு: விஷ்ணு:
குரு: தேவோ மஹேஶ்வர: |
குரு: ஸாக்ஷாத் பரப்ப்ரஹ்மா
தஸ்மை ஸ்ரீ குரவே நம: ||
ஓம் ஸ்ரீ குருப்ப்யோ நம: |
ஓம் ஸ்ரீ குலதேவதாப்ப்யோ நம: |
ஓம் ஸ்ரீ இஷ்டதேவதாப்ப்யோ நம: |
ஓம் ஸ்ரீ க்ராமதேவதாப்ப்யோ நம: |

*-கை கூப்பி ஸரஸ்வதீ பூஜை நன்கு நடைபெற எல்லா தெய்வங்களையும் வேண்டிக்கொள்ளவும்.*

## 1.4. ஆஸநபூஜை

*கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லி புஷ்பம் அக்ஷதை ஆகியவற்றை தங்கள் ஆஸனத்திற்குப் போடவும்.*

ப்ருத்திவ்யா: மேருப்ருஷ்ட்டருஷி: |
ஸுதலம் ச்சந்த: | கூர்மோ தேவதா |
ப்ருத்த்வி த்வயா த்த்ருதா லோகா
தேவி த்வம் விஷ்ணுநா த்ருதா: |
த்வஞ் ச த்தாரய மாம் தேவி
பவித்ரஞ் சாஸநம் குரு ||

## 1.5. கண்டாபூஜை: (வெங்கலமணிக்குப் பூஜை)

*வெங்கல மணிக்குச் சந்தனம், குங்குமம் இடவும். கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லவும்.*

**ஆகமார்த்தந்து தேவாநாம்**
**கமநார்த்தந்து ரக்ஷஸாம் |**
**க்ண்டாரவம் கரோம்யாதௌ**
**தேவதாஹ்வாந லாஞ்சநம் ||**

*இப்போது மணியை அடித்துக்கொண்டே கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லவும்.*

**ஆரம்ப்ப கால முஹூர்த்த:**
**ஶுப்பமுஹூர்த்த: |**
**அஸ்த் விதி ப்பவந்த:**
**அநுக்ருஹண்ணந்து |**
**ஶுப்பமுஹூர்தோஸ்து ||**

## 1.6. கணபதி பிரார்த்தனை

*இப்பொழுது புஷ்பம், அக்ஷதையுடன் இருகைகளையும் கூப்பிக்கொண்டு (சேர்த்து வைத்துக்கொண்டு) கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லவும்.*

**ஹரி ஓம்| ததேவ லக்நம் ஸுதிநம் ததேவ**
**தாராபலம் சந்த்ர பலம் ததேவ |**
**வித்த்யா பலம் தைவ பலம் ததேவ,**
**லக்ஷ்மீபதே-அங்க்க்ரியுகம் ஸ்மராமி ||**
**ஸுமுக்கஶ்ச, ஏகதந்தஶ்ச,**
**கபில: கஜகர்ணக:**
**லம்போதரஶ்ச விகட:**

விக்⁴நராஜ: விநாயக:
த்⁴ூமகேத: கணாத்⁴யக்ஷ:
ப⁴ாலசந்த்³ர: கஜாநந:
வக்ரதுண்ட: ஶூர்பகர்ண:
ஹேரம்ப: ஸ்கந்தபூர்வஜ: |
கலா ஸங்க்யாநி நாமாநி ய:
பட்டேத் ச்ச்ருணுயாதபி |
வித்³யாரம்பே⁴ விவாஹே ச
ப்ரவேஶே நிர்கமே தத்தா |
ஸங்க்ராமே ஸர்வ கார்யேஷு,
விக்⁴நஸ் தஸ்ய ந ஜாயதே ||
அபீப்ஸிதார்த்த ஸித்³த்⁴யர்த்தம்:
பூஜிதோ ய: ஸுரைரபி: |
ஸர்வ விக்⁴நச்ச்சிதே-தஸ்மை
கணத்திபதயே நம: ||

இப்பொழுது இரண்டு கைகளிலும் புஷ்பம், அக்ஷதை எடுத்துக் கொண்டு, கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு தலையின் இரு பக்கங்களிலும் (பக்கவாட்டில்) குட்டிக் கொள்ளவும்.

ஶுக்லாம் பரத்⁴ரம் விஷ்ணும்
ஶஶிவர்ணம் சதுர்ப்⁴புஜம் |
ப்ரஸந்ந-வதநம் த்⁴யாயேத்
ஸர்வ விக்⁴நோப-ஶாந்தயே ||

## 1.7. ப்ராணாயாமம்

பெண்களுக்கு ப்ராணாயாமம் கிடையாது. ஆண்கள் மட்டும் செய்யவும். வலதுகையின் மோதிரவிரலாலும், கட்டை

*விரலாலும் மூக்கின் நுனியின் இரண்டு பக்கத்திலும் தொட்டுக் கொண்டு கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்ல வேண்டும்.*

**ஓம் ப்பூ: | ஓம் ப்புவ: | ஓக்ம்ஸுவ: |**

**ஓம் மஹ: | ஓம் ஜந: |**

**ஓம் தப: | ஓக்ம்ஸத்யம் |**

**ஓம் தத்[1]ஸவிதுர்-வ[2]ரேண்யம்**

**ப்பர்[1]கோ தேவஸ்[1]ய த்தீமஹி |**

**தியோ யோ [1]ந: ப்ரசோத[2]யாத் ||**

**ஓமாபோ ஜ்யோதீ-ரஸோ**

**ऽம்ருதம் ப்ரஹ்ம**

**ப்பூர்ப்புவஸ்ஸுவ-ரோம் ||**

*-என்று சொல்லி முடித்துவிட்டு, வலது கையால், வலது காதை மூடினாற் போலத் தொடவும்.*

## 1.8. ஸங்கல்பம்

*இப்பொழுது ஸங்கல்பம் செய்ய இருக்கிறோம். வலது தொடையின் மேல் இடதுகையை உள்ளங்கை மேல் நோக்கியவாறு இருக்கும்படி வைத்துக்கொண்டு வலதுகையில் புஷ்பம், அக்ஷதை ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, வலதுகையை இடது உள்ளங் கையின் மேல் மூடியவாறு வைத்துக்கொண்டு, கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்ல வேண்டும்.*

**மமோபாத்த ஸமஸ்த துரித-க்ஷய-த்வாரா**

**ஸ்ரீ பரமேஶ்வர-ப்ரீத்யர்த்தம் |**

**(***அல்லது குடும்ப வழக்கப்படி* **ஸ்ரீ நாராயண-ப்ரீத்யர்த்தம்)**

**கரிஷ்ய மாணஸ்ய கர்மண:**

**நிர்விக்க்நேந பரிஸமாப்த்யர்த்தம்**

**ஆதௌ விக்க்நேஶ்வர பூஜாம் கரிஷ்யே ||**

*-என்று சொல்லி புஷ்பம், அக்ஷதை, விரலில் சேர்த்துள்ள கட்டை தர்பங்கள் ஆகியவற்றைக் கீழே வடக்காகப் போடவும்.*

**அப உபஸ்ப்ருஶ்ய |**

*-என்று பஞ்ச பாத்திரத்தில் உள்ள ஜலத்தைத் தொடவும்.*

### 1.9. ஆவாஹநம்

*இப்பொழுது சிறிய மஞ்சள் பிள்ளையாரை ஸ்தாபித்து பூஜை செய்ய இருக்கிறோம். அக்ஷதை, புஷ்பம் கையில் எடுத்துக் கொண்டு, கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லவும்.*

**கணாநாம் த்வா**
**கணபதிக்ம் ஹவாமஹே**
**கவிம் கவீநாம்**
**உபமஶ்ர வஸ்தமம் |**
**ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம்**
**ப்ரஹ்மணஸ்பத ஆ ந:**
**ஶ்ருண்வந் நூதிப்பி: ஸீத ஸாதநம் ||**
**ப்பூர்ப்புவஸ்ஸுவ-ரோம் |**
**அஸ்மிந் ஹரித்ரா பிம்பே ஸுமுக்கம்**
**மஹாகணபதிம் த்த்யாயாமி**
**மஹாகணபதிம் ஆவாஹயாமி |**

*-என்று சொல்லி மஞ்சள் பிள்ளையாருக்கு அக்ஷதை, புஷ்பம் சமர்பிக்கவும்.*

### 1.10. ஷோடசோபசார பூஜை

*கையில் அக்ஷதை, புஷ்பம் கையில் எடுத்துக்கொண்டு,*

**மஹாகணபதயே நம : ஆஸநம் ஸமர்பயாமி |**

*-என்று சொல்லி அக்ஷதை, புஷ்பம் சமர்பிக்கவும். கீழ்க்கண்ட மந்திரங்களுக்கு உத்திரணியில் ஜலம் எடுத்து பாத்திரத்தில் விடவும்.*

மஹாகணபதயே நம:

பாதயோ: பா³த்³யம் ஸமர்பயாமி |

மஹாகணபதயே நம:

அர்க்⁴யம் ஸமர்பயாமி |

மஹாகணபதயே நம:

ஆசமநீயம் ஸமர்பயாமி |

மஹாகணபதயே நம:

ம³து⁴பர்கம் ஸமர்பயாமி |

ஓம் ³பூர்³புவஸ்ஸுவ :

மஹாகணபதயே நம:

ஸ்நாநம் ஸமர்பயாமி |

மஹாகணபதயே நம :

ஸ்நாநா-நந்தரம் ஆசமநீயம் ஸமர்பயாமி ||

*கீழ்க்கண்ட மந்திரங்களுக்கு புஷ்பம், அக்ஷதை எடுத்து மஞ்சள் பிள்ளையாருக்கு சமர்பிக்கவும்.*

மஹாகணபதயே நம:

வஸ்த்ரார்த³ம் அக்ஷதாந் ஸமர்பயாமி |

மஹாகணபதயே நம:

யஜ்ஞோபவீதார்த³ம் அக்ஷதாந் ஸமர்பயாமி |

மஹாகணபதயே நம:

ஆபரணார்த³ம் அக்ஷதாந் ஸமர்பயாமி |

மஹாகணபதயே நம:

திவ்யபரிமள கந்³தாந் ³தாரயாமி | *(சந்தனம்)*

மஹாகணபதயே நம:

கந்த்⁴தஸ்யோபரி அக்ஷதாந் ஸமர்பயாமி |

மஹாகணபதயே நம:

ஹரித்ரா குங்குமம் ஸமர்பயாமி | *(குங்குமம்)*

மஹாகணபதயே நம:

மந்த்ராக்ஷதாந் ஸமர்பயாமி | *(மஞ்சள் அக்ஷதை)*

மஹாகணபதயே நம:

புஷ்பமாலாம் ஸமர்பயாமி |

*(தொடுத்த பூமாலையைப் சமர்பிக்கவும்.)*

மஹாகணபதயே நம: புஷ்பை: பூஜயாமி |

*(புஷ்பம் சமர்பிக்கவும்.)*

### 1.11. அர்ச்சனை

*கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லி, அக்ஷதை புஷ்பம் போட்டு, மஞ்சள் பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்யவும்.*

ஓம் ஸுமுகாய நம :

ஓம் ஏகதந்தாய நம :

ஓம் கபிலாய நம :

ஓம் கஜகர்ணகாய நம :

ஓம் லம்போதராய நம :

ஓம் விகடாய நம :

ஓம் விக்⁴நராஜாய நம :

ஓம் விநாயகாய நம :

ஓம் த்⁴தூமகேதவே நம :

ஓம் கணாத்⁴யக்ஷாய நம :

ஓம் ப⁴ாலசந்த்ராய நம :

**ஓம் கஜாநநாய நம :**
**ஓம் வக்ரதுண்டாய நம :**
**ஓம் ஶூர்பகர்ணாய நம :**
**ஓம் ஹேரம்பாய நம :**
**ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம :**
**ஓம் ஸித்திவிநாயகாய நம :**
**ஓம் மஹாகணபதயே நம :**
**புஷ்பாணி அர்சநாந் ஸமர்பயாமி ||**

*-புஷ்பம் சமர்பிக்கவும்.*

## 1.12. தூபம், தீபம்

*மணி அடித்துக்கொண்டு தூபம் ஏற்றிக் காண்பித்துக் கொண்டே கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லவும்.*

**தஶாங்கம் குக்குலோபேதம்**
**ஸுகந்த்தம் ச மநோஹரம் |**
**ஆக்க்ரேய : ஸர்வ தேவாநாம்**
**தூபோऽயம் ப்ரதிக்ருஹ்யதாம் ||**
**மஹாகணபதயே நம:**
**த்தூபம் ஆக்க்ராபயாமி |**

*மணி அடித்துக்கொண்டு நெய் தீபம் ஏற்றிக் காண்பித்துக் கொண்டே கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லவும்.*

**ஸாஜ்யம் த்ரிவர்த்தி ஸம்யுக்தம்**
**வஹ்நிநா யோஜிதம் மயா |**
**க்ருஹாண மங்களம் தீபம்**
**த்ரைலோக்ய திமிராபஹம் ||**

**மஹாகணபதயே நம:**

**க்ருத தீபம் தர்ஶயாமி |**

**தூப தீபாநந்தரம் ஆசமநீயம் ஸமர்பயாமி ||**

*-உத்திரணியில் ஜலம் எடுத்து பாத்திரத்தில் விடவும்.*

**புஷ்பாணி ஸமர்பயாமி ||**

*-என்று சொல்லி கையில் உள்ள புஷ்பத்தை சுவாமியிடம் சேர்க்கவும்.*

## 1.13. நைவேத்யம்

1.13.1. **பரிஷேசநம்.** *தேங்காய் உடைத்து, வெற்றிலை, பாக்கு, பழம், வெல்லம் ஆகியன வைத்து, மணி அடித்து, கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்லி தீர்த்தம் ப்ரதக்ஷிணம் செய்யவும்.*

**ஓம் பூர்புவஸ்ஸுவ :**
**ஓம் தத்[1]ஸவிதுர்-வ[2]ரேண்யம்**
**ப[1]ர்கோ தேவஸ்[1]ய தீமஹி |**
**தியோ யோ [1]ந: ப்ரசோத[2]யாத் ||**
**தே[1]வ ஸவித: ப்[1]ரஸுவ |**

*பகலில்*

**ஸத்யந்-த்வா-ருதேந ப[1]ரிஷிஞ்சாமி |**

*மாலையில் / இரவில்*

**ருதம்-த்வா ஸத்யேந ப[1]ரிஷிஞ்சாமி |**

*-என்று தீர்த்தத்தினால் சுற்றவும். கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்லி தீர்த்தம் ப்ரோக்ஷணம் செய்யவும்.*

**அம்ருதோபஸ்-த[1]ரண-மஸி ||**

1.13.2. **சமர்பணம்.** *கையில் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு இடது கையால் ப்ரஸாத பாத்திரத்தைத் தொட்டுக் கொண்டு, தேங்காய்*

*முதலான ப்ரஸாத பொருட்களை ஸ்வாமிக்குக் நைவேத்யம் காட்ட வேண்டும். கீழ்க்கண்ட ஒவ்வொரு மந்திரத்தைச் சொல்லும் பொழுதும், கையை பாத்திரத்திலிருந்து மஞ்சள் பிள்ளையாரை நோக்கிக் கொண்டு சென்று காண்பித்து விட்டுத் திரும்பவும் கையை பாத்திரத்திற்குக் கொண்டு வந்து, இப்படியே மந்திரங்கள் முடியும் வரை காண்பிக்க வேண்டும்.*

**ஓம் ப்ராணாய ஸ்வாஹா |**

**ஓம் அபாநாய ஸ்வாஹா |**

**ஓம் வ்யாநாய ஸ்வாஹா |**

**ஓம் உதாநாய ஸ்வாஹா |**

**ஓம் ஸமாநாய ஸ்வாஹா |**

**ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா |**

**மஹாகணபதயே நம:**

**நாரிகேளகண்டம், கதளீபலம்,**

**குடகண்டம், அம்ருதம்,**

**மஹா நைவேத்யம் நிவேதயாமி ||**

*-என்று சொல்லி கையில் உள்ள புஷ்பத்தை சுவாமியிடம் சேர்க்கவும்.*

**நைவேத்யாநந்தரம் ஆசமநீயம் ஸமர்பயாமி |**

*-என்று சொல்லி உத்திரணியில் ஜலம் எடுத்து பாத்திரத்தில் விடவும்.*

**அம்ருதா-பிதாநமஸி ||**

*-என்று சொல்லி உத்திரணியில் ஜலம் எடுத்து பாத்திரத்தில் விடவும். இப்போது உத்திரணியில் ஜலம் எடுத்து, கீழ்க்கண்ட மந்திரங் களை சொல்லவும். கையில் புஷ்பம் எடுத்துக் கொள்ள வேண்டாம்.*

**ஓம் பூர்புவஸ்ஸுவ :**

**பூகீ³பல ஸமாயுக்தம்**
**நாகவல்லீ தளைர்யுதம் |**
**கர்பூர சூர்ண ஸம்யுக்தம்**
**தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம் |**
**மஹாகணபதயே நம :**
**திவ்ய தாம்பூலம் நிவேதயாமி |**
**நைவேத்³யாநந்தரம் ஆசமநீயம் ஸமர்பயாமி ||**

*-என்று சொல்லி ஒரு உத்திரணி ஜலம் பாத்திரத்தில் விடவும்.*

**அம்ருதா-பித்⁴ாநமஸி ||**
**உத்தரா ப்⁴போஜநம் ஸமர்பயாமி ||**

*-என்று சொல்லி உத்திரணியில் ஜலம் எடுத்து பாத்திரத்தில் விடவும்.*

## 1.14. கற்பூர ஆரத்தி

*இப்பொழுது ஒரு சிறிய கட்டி கற்பூரத்தை ஏற்றி, மணியை அடித்துக் கொண்டு, கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லிக் கொண்டே மஞ்சள் பிள்ளையாருக்குக் காட்டவும்.*

**ஓம் நமோ வ்ராத-பதயே |**
**நமோ கணபதயே |**
**நம: ப்ரமத்³த பதயே |**
**நமஸ்தேऽஸ்து லம்போதராய**
**ஏக தந்தாய விக்⁴ந-நாஶிநே ஶிவஸுதாய**
**ஸ்ரீ வரத-மூர்த்தயே நமோ நம: ||**

**சந்த்ர ஆதித்யௌஶ்ச த⁴ரணீ**
**வித்³யுதக்நி: த்வமேவ ச |**

**த்வமேவ ஸர்வ ஜ்யோதீ: |**

**நீராஜநம் இதம் பிரப்போ ||**

**மஹாகணபதயே நம :**

**கர்பூர-நீராஜநம் தர்ஶயாமி |**

*-கற்பூராரத்தியை பிள்ளையாருக்குக் காட்டியபின், கற்பூர தட்டை கீழே வைத்துவிட்டு,*

**நீராஜநாநந்தரம் ஆசமநீயம் ஸமர்பயாமி |**

*-என்று சொல்லி உத்திரணியில் ஜலம் எடுத்து பாத்திரத்தில் விடவும்.*

**ரக்ஷாந்த்தாரயாமி ||**

*-என்று புஷ்பம் எடுத்து கற்பூரத்தை சுற்றிக் காண்பித்து பாதத்தில் சேர்க்கவும். எல்லோரும் இப்போது கற்பூரம் ஒற்றிக் கொள்ள வேண்டும்.*

## 1.15. மந்த்ர புஷ்பம்

*புஷ்பம், அக்ஷதை கையில் எடுத்துக் கொண்டு கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லி பிள்ளையாருக்குப் சமர்ப்பிக்கவும்.*

**யோऽபாம் புஷ்பம் வேத,**

**புஷ்பவாந் பிரஜாவாந்**

**பஶூமாந் ப்பவதி |**

**சந்த்ரமா வா அபாம் புஷ்பம்,**

**புஷ்பவாந் பிரஜாவாந்**

**பஶூமாந் ப்பவதி ||**

**யோ வேததௌ ஸ்வர:**

**ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்ட்டித: |**

**தஸ்ய ப்ரக்ருதி லீநஸ்ய ய:**

**பரஸ்ஸ மஹேஶ்வர: ||**

**மஹாகணபதயே நம:**

**வேதோக்த மந்த்ரபுஷ்பம் ஸமர்பயாமி ||**

*-என்று சொல்லி மஞ்சள் பிள்ளையாருக்குப் புஷ்பம் போடவும்.*

**ஸுவர்ண புஷ்பம் ஸமர்பயாமி |**

*-என்று சொல்லி தங்கம் அல்லது மற்ற நாணயத்தை பாதத்தில் போடவும்.*

**ஸமஸ்த தேவோபசார ராஜோபசார**

**பூஜாம் ஸமர்பயாமி ||**

*-என்று சொல்லி புஷ்பம், அக்ஷதை போடவும்.*

### 1.16. ப்ரார்த்தனை, நமஸ்காரம்

*இப்பொழுது அனைவரும் புஷ்பம், அக்ஷதை கையில் எடுத்துக் கொண்டு, இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, கீழ்க்கண்ட மந்திரங்களை எல்லோரும் சொல்லி, ப்ரதக்ஷிணம் செய்து, பிரார்த்தனை செய்து, நமஸ்காரம் செய்து கொள்ளவும்.*

**வக்ரதுண்ட மஹாகாய**

**ஸூர்யகோடி ஸமப்ரப |**

**அவிக்நம் குரு மே தேவ**

**ஸர்வ கார்யேஷு ஸர்வதா ||**

**அபீப்ஸிதார்த்த ஸித்தயர்த்தம்**

**பூஜிதோ ய: ஸுரைரபி |**

**ஸர்வ விக்நச்சிதே தஸ்மை**

**கணாதிபதயே நம: ||**

நமோ நமோ கணேஶாய
நமஸ்தே விஶ்வருபிணே |
நிர்விக்க்நம் குருமே காமம்
நமாமி த்வாம் கஜாநந ||

அகஜாநந பத்மார்க்கம்
கஜாநநம் அஹர்நிஶம்|
அநேகதந்தம் ப்பக்தாநாம்
ஏகதந்தம் உபாஸ்மஹே ||

மஹாகணபதயேநம:
ப்ரார்த்தநாந் ஸமர்பயாமி |
மஹாகணபதயே நம:
ஸர்வோபசாராந் ஸமர்பயாமி ||
அனயா பூஜயா ஶ்ரீ மஹாகணபதி ப்ரீயதாம் ||

*-என்று சொல்லி கையில் உள்ள புஷ்பம், அக்ஷதையை மஞ்சள் பிள்ளையாருக்குப் போட்டுவிட்டு, நமஸ்காரம் செய்யவும்.*

*கணபதி பூஜை முடிவுற்றது.*

*ஶ்ரீ துர்கா லக்ஷ்மீ ஸரஸ்வதீ பூஜை இனி ஆரம்பம்.*

********

# உ. ஸ்ரீ துர்கா-லக்ஷ்மீ-ஸரஸ்வதீ பூஜை

## (ப்ரதாந பூஜை)

*இனி ப்ரதாந துர்கா-லக்ஷ்மீ-ஸரஸ்வதீ பூஜை ஆரம்பம். புஸ்தக கோஸம், துர்கா, லக்ஷ்மீ, ஸரஸ்வதீ பிம்பங்கள், படங்கள் அல்லது கலஸம் ஆகியவற்றுக்கு அலங்காரங்கள் செய்து தயார் செய்து கொண்டு ஆவாஹனம் செய்து பூஜை செய்ய வேண்டும்.*

### 2.1. கணபதி பிரார்த்தனை

*இப்போது பூஜை செய்பவர் பவித்ரத்துடன் 2 கட்டை தர்பங்களைச் சேர்த்துக் கொண்டு, கையில் புஷ்பம், அக்ஷதை எடுத்துக் கொண்டு, தலையின் இரு பக்கமும் குட்டிக் கொண்டே, கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்ல வேண்டும்.*

**ஶுக்லாம் பரத்தரம் விஷ்ணும்**
**ஶஶிவர்ணம் சதுர்ப்புஜம் |**
**ப்ரஸந்ந-வதநம் த்த்யாயேத்**
**ஸர்வ விக்க்நோப-ஶாந்தயே ||**

### 2.2. ப்ராணாயாமம்

*பெண்களுக்கு ப்ராணாயாமம் கிடையாது.* *ஆண்களுக்கு மட்டும் தான்.*

**ஓம் ப்பூ: | ஓம் ப்புவ: | ஓக்ம்ஸுவ: |**
**ஓம் மஹ: | ஓம் ஜந: | ஓம் தப: |**
**ஓக்ம்ஸத்யம் | ஓம் தத்[1] ஸவிதுர்-வ[2]ரேண்யம்**
**ப்பர்[1]கோ தேவஸ்[1]ய த்தீமஹி |**
**த்தியோ யோ [1]ந: ப்ரசோத[2]யாத் ||**
**ஓமாபோ ஜ்யோதீ ரஸோ**
**ऽம்ருதம் ப்ரஹ்ம ப்பூர்ப்புவஸ்ஸுவ-ரோம் ||**

-என்று சொல்லி முடித்துவிட்டு, வலது கையால், வலது காதை மூடினாற் போலத் தொடவும்.

## 2.3. ஸங்கல்பம்

*நடப்பு வருஷம் பஞ்சாங்கத்தில் உள்ளபடி, அன்றைய தினத்திற்கான நக்ஷத்ரம், திதி, மாதம், ருது ஆகியவற்றைக் குறித்து வைத்துக் கொள்ளவும். (தமிழ் மாத, நாட்களுக்கான ஸம்ஸ்க்ருத மாற்று வார்த்தைகள் பக்கம் 103-106-ல் கொடுக்கப்பட்டு உள்ளது). நவமியன்று ஒரு நாள் பூஜை செய்பவரோ அல்லது முன்பு கூறியபடி, 7ம் நாள் ஸப்தமியன்று பூஜையைத் தொடங்குபவரோ அன்றைய தினத்திற்கான நக்ஷத்ரம், திதி, மாதம் ஆகியவற்றை ஸங்கல்பத்தில் கூறிக்கொள்ளவும்.*

*புஷ்பம், அக்ஷதை கையில் எடுத்துக் கொண்டு ஸங்கல்பம் செய்யவேண்டும். இடதுகை வலது துடையின் மேல் உள்ளங்கை மேல்நோக்கியும், வலது உள்ளங்கை அதன் மீது மூடியபடி வைத்தபடி, கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லவும்.*

**மமோபாத்த ஸமஸ்த துரித-க்ஷய-த்வாரா**
**ஸ்ரீ பரமேஶ்வர-ப்ரீத்யர்த்தம்**
**(*அல்லது குடும்ப வழக்கப்படி* ஸ்ரீ நாராயண-ப்ரீத்யர்த்தம்)**
**ஶுபே திநே ஶோபநே முஹூர்தே**
**அத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே,**
**ஶ்வேதவராஹ கல்பே, வைவஸ்வத-மந்வந்தரே,**
**அஷ்டாவிம்ஶதி-தமே, கலியுகே, ப்ரதமே பாதே,**
**ஜம்பூத்வீபே, பாரத வர்ஷே, பரதகண்டே,** #1
**மேரோ: தக்ஷிணே பார்ஶ்வே ஶகாப்தே**

(தொடர்ச்சி பக்கம் 36ல்)

#1 -*அவரவர்கள் இருக்கும் கண்டம், நாடு, ஊர் ஆகியவற்றிற்குத் தகுந்தபடி இந்த இடத்தில் அடுத்த பக்கத்தில் (#Page No.35ல்) கொடுத்துள்ளபடி மாற்றி கூறிக்கொள்ளவும்.*

Changes to be considered in Sankalpam when performing in other countries :

*மற்ற நாடுகளிலும் இடங்களிலும் தர்பணம் செய்யும் பொழுது ஸங்கல்பத்தில் கூற வேண்டிய பொதுவான மாறுதல்களை அங்குள்ள வாத்யாரிடமும் கேட்டு தெரிந்து கொள்ளவும். சில நாடுகளுக்கும் இடங்களுக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. சரிபார்த்துக் கொள்ளவும்.*

*(*For whole Southern India:)

**....ஜம்பூத்வீபே, ்பாரத வர்ஷே, ்பரத்கண்டே,....**

*(*For USA East:)

**....க்ரௌஞ்சத்வீபே, ஹிரண்யக வர்ஷே, கோதீர்தகண்டே,**

*(*For USA West:)

**....க்ரௌஞ்சத்வீபே, ஹிரண்யக வர்ஷே, ஐந்த்ரதகண்டே,**

*(*For USA California:)

**....க்ரௌஞ்சத்வீபே, ஹிரண்யக வர்ஷே, ஐந்த்ரதகண்டே, ்கபிலாரண்ய க்ஷேத்ரே,**

(For USA California, Bay Area:) add to the above

**...ஸ்ரீ வஸந்தபுரி நஹரே**

*(*For England. UK:)

**....ஶால்மலித்வீபே, ப்ரஹதாரிண்ய க்ஷேத்ரே, மேரோ: உத்தரே பார்ஶ்வே விந்திஶ்சித்த–பக்ஷித திக்பாஹே, எதது ஸமுத்ர மத்யஸ்தித, இங்க்லாந்து ப்ரதேஸே.....**

(For South America, Australia, Middle-East, East Asia, Russia, China, etc.. we are yet to get authentic details. Readers who know may share)

**அஸ்மிந் வர்தமாநே வ்யாவஹாரிகே,**

**ப்ரப⁴வாதீநாம் ஷஷ்ட்யா: ஸம்வத்ஸராணாம் மத்⁴யே**

*-நடப்பு வருஷம் பஞ்சாங்கத்தில் உள்ளபடி, இனி கீழே ஒவ்வொன்றையும் பொருத்தமாகச் சொல்ல வேண்டும்.*

.............. *(நடப்பு வருஷம்)* **நாம ஸம்வத்ஸரே,**

**தக்ஷிணாயநே,**

*(நடப்பு ருது)* **வர்ஷ / ஶரத் ருதௌ,**

*(நடப்பு மாதம்)* **ஆஶ்வயுஜ மாஸே** #2

*(அல்லது* **கன்யா / துலா மாஸே***)*

**ஶுக்லபக்ஷே**

*எந்தத் திதி என* - .......... **ஶுப⁴திதௌ²,** #2

*எந்தக் கிழமை என* - .......... **வாஸரயுக்தாயாம்,**

*எந்த நக்ஷத்திரம் என-* ....... **ஶுப⁴நக்ஷத்ரயுக்தாயாம்,**

**ஶுப⁴யோக ஶுப⁴கரண ஏவங்குண**

**விஶேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம்**

**வர்தமாநாயாம்**

*எந்தத் திதி என* - .......... **ஶுப⁴திதௌ²,** #2

**அஸ்மாகம் ஸஹகுடும்பா³நாம்,**

**க்ஷேம, ஸ்தை²ர்ய, தைர்ய, வீர்ய, விஜய,**

**ஆயுராரோக்ய, ஐஶ்வர்யாணாம்,**

**அபி⁴வ்ருத்³த்⁴யர்த்²தம்**

---

#2 *சாந்த்ரமான வருஷப்படி* **ஆஶ்வயுஜ மாதத்தில் ஸப்தமி** *திதியில் ஆவாஹநம் செய்து 3 நாள் பூஜை செய்வது விதி. 7-ம் நாள் பூஜை தொடங்கினுல்* **ஸப்தமி** *என்றும் 9-ம் நாள் பூஜைக்கு* **நவமி** *என்றும் கூறிக் கொள்ளவும். மாதத்தை தமிழ் மாதத்தின்படி கூறினுல் புரட்டாசி அல்லது ஐப்பசியாக இருந்தால்* **கன்யா** *அல்லது* **துலா மாஸே** *என்று கூறிக் கொள்ளவும்.* .

த்₃தர்ம, அர்த்₂த, காம, மோக்ஷ, சதுர்வித்₄த
ப்₂பல புருஷார்த்₂த ஸித்₃த்₄யர்த்₂தம்,
இஷ்ட காம்யார்த்₂த ஸித்₃த்₄யர்த்₂தம்,
ஆயுஷ்மத் ஸத்ஸந்தான ஸம்ருத்₃த்₄யர்த்₂தம்,
நித்ய கல்யாண ஸம்ருத்₃த்₄யர்த்₂தம்,
த்₃தீர்க்₄க ஸௌமங்கல்யா–வாப்த்யர்த்₂தம்
புத்ர பௌத்ரான் அப்₄பிவ்ருத்₃த்₄யர்த்₂தம்,
அரோக த்₃ருட்₄டகாத்ரதா ஸித்₃த்₄யர்த்₂தம்,
ஸர்வேஷாம் ஞாதீனாம்
ஸகலவித்₄த க்ஷேம அப்₄பிவ்ருத்₃த்₄யர்த்₂தம்,
அன்யோன்ய ஸ்நேஹ ஸௌம்ய ப்ராப்த்₄யர்த்₂தம்,
ஸ்ரீ துர்கா லக்ஷ்மீ ஸரஸ்வதீ ப்ரீத்யர்த்₂தம்,
ஸ்ரீ துர்கா லக்ஷ்மீ ஸரஸ்வதீ பிரஸாத ஸித்₃த்₄யர்த்₂தம்
ஸ்ரீ துர்கா லக்ஷ்மீ ஸரஸ்வதீ பிரஸாதாத்
ஸர்வ வித்யாபாரங்கதத்வ ஸித்₃த்₄யர்த்₂தம்
ஸ்ரீ துர்கா லக்ஷ்மீ ஸரஸ்வதீ பிரஸாதாத்
ஸமஸ்த மங்கள வாப்த்யர்த்₂தம்,
ஸமஸ்த துரித உபஶாந்த்யர்த்₂தம்,
ஸ்ரீ துர்கா லக்ஷ்மீ ஸரஸ்வதீ பிரஸாதாத்
ஸர்வாரிஷ்ட நிவ்ருத்தி–த்வாரா #3
ஸர்வாப்₄பீஷ்ட ஸித்₃த்₄யர்த்₂தம்
ஆஶ்வயுஜ ஶுக்ல ........... புண்யகாலே
*(எந்தத் திதி என)*
கல்போக்த ப்ராகாரேண

---

#3 *வேறு தனிப்பட்ட ப்ரார்தனை இருப்பின் சேர்த்துக் கொள்ளவும்.*

**யாவச்ச்சக்தி த்த்யாந ஆவாஹநாதி,**

**ஸமஸ்த ஷோடஶோபசாரை:**

**அஸ்மிந் கலஸே / அஸ்மிந் பிம்பே**

**ஸ்ரீ துர்கா லக்ஷ்மீயுக்தாம் ஸரஸ்வதீ**

**பூஜாம் கரிஷ்யே ||**

**ததங்கம் கலஸ பூஜாம் கரிஷ்யே ||**

*-புஷ்பம், அக்ஷதை, கட்டை தர்பையை வடக்கில் போடவும்.*

**அப உபஸ்ப்ருஶ்ய ||**

*-என்று சொல்லி உத்தரிணியினால் ஜலம் எடுத்து கையைத் துடைத்துக் கொள்ளவும்.*

## 2.4. கணபதி உத்யாபநம்

*இப்பொழுது முதலில் பூஜை செய்த ஸ்ரீ மஹாகண பதியை, அதாவது மஞ்சள் பிள்ளையாரை உத்யாபநம் அதாவது யதாஸ்தானம் செய்ய வேண்டும். புஷ்பம், அக்ஷதை கையில் எடுத்துக்கொண்டு கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லவும்.*

**கணாநாம் த்வா**

**கணபதிக்ம் ஹவாமஹே**

**கவிம் கவீநாம்**

**உபமஶ்ர வஸ்தமம் |**

**ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம்**

**ப்ரஹ்மணஸ்பத ஆ ந:**

**ஶ்ருண்வந் நூதிப்பி: ஸீத ஸாதநம் ||**

**ப்பூர்ப்புவஸ்ஸுவ-ரோம் |**

**அஸ்மிந் ஹரித்ரா பிம்பே ஸுமுக்கம்**

**ஓம் மஹாகணபதயே நம:**
**யத்தாஸ்த்தாநம் பிரதிஷ்ட்டாபயாமி ||**
**ஶோப்பநார்த்தே க்ஷேமாய**
**புநர்–ஆகமநாய ச ||**

-என்று சொல்லி, புஷ்பம், அக்ஷதை போட்டு மஞ்சள் பிள்ளையாரை **வடக்குப் பக்கமாக,** சற்று நகர்த்தி வைத்து விட்டு, நமஸ்காரம் செய்து, தட்டில் உள்ள அர்ச்சனை செய்த புஷ்பம், அக்ஷதை ஆகியவற்றை எடுத்து, பிரசாதமாக பூஜை செய்த அனை வரும், அங்குள்ள மற்ற மனிதர்களும் சிரசில் போட்டுக் கொள்ளவும். இனி நவராத்திரி துர்கா லக்ஷ்மீ ஸரஸ்வதீ பூஜை தொடரும்.

## 2.5. கலச பூஜை

இப்போது, ஒரு சொம்பு/குடம் அல்லது பஞ்ச பாத்திரத் திலேயே புதிதாக நீர் எடுத்துக்கொண்டு சுத்தி பூஜை செய்கிறோம். விரும்பினல் முழுமையாக புண்யாகவாசனமும் கணபதி பூஜை முடிந்தவுடன் செய்யலாம். புண்யாகவாசனம் செய்தாலும் இதைச் செய்யவும்.

**ததம் கத்வேந கலஶபூஜாம் கரிஷ்யே ||**

கலஸம்/பஞ்சபாத்திரத்திற்கு நான்கு பக்கமும் சந்தனம், குங்குமம் இட்டு, அதில் உள்ள ஜலத்தில் ஒரு புஷ்பத்தைப் போட்டு, அதன் மேல்பக்கம் வலது கையால் மூடியபடி, கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லவும்.

**ஓம் கலஶஸ்ய முக்கே விஷ்ணு:**
**கண்ட்டே ருத்ர: ஸமாஶ்ரித: |**
**மூலே தத்ர ஸ்த்திதோ ப்ரஹ்மா**
**மத்யே மாத்ருகணா: ஸ்ம்ருதா: ||**
**குக்ஷௌ து ஸாகரா: ஸர்வே**
**ஸப்தத்வீபா வஸுந்த்தரா |**

ருக்-வேதோऽத்த யஜுர்வேத:
ஸாம-வேதோऽப்-யத்தர்வண: |
அங்கைஶ்ச ஸஹிதா :
ஸர்வே கலஶாம்பு ஸமாஶ்ரிதா: |
ஆயாந்து
ஶ்ரீ துர்கா லக்ஷ்மீயுக்தாம் ஸரஸ்வதீ தேவீம்
பூஜார்த்தம் துரிதக்ஷயகாரகா: ||
கங்கே ச யமுநே சைவ கோதாவரி
ஸரஸ்வதி | நர்மதே ஸிந்து காவேரி
ஜலேऽஸ்மிந் ஸந்நிதிம் குரு ||

*-கீழ்க்கண்ட வேத மந்திரங்களைத் தெரிந்த ஆண்கள் மட்டும் சொல்லவும். பெண்களும் மற்றவர்களும் ## பூர்புவஸ்ஸுவராப: ஓம் முதல் மந்திரங்களைத் தொடர்ந்து சொல்லவும்.*

ஆபோ வா இதம் ஸர்வம்
விஶ்வா பூதாந்யாப:
ப்ராணா வா ஆப:
பஶவ ஆபோऽந்நமாபோ-
அம்ருத மாபஸ் ஸம்ராடாபோ விராடாப :
ஸ்வராடாபஶ் சந்தாம்ஸ்யாபோ,
ஜ்யோதீம்ஷ்யாபோ யஜும்ஷ்யாப:
ஸத்ய-மாப: ஸர்வா தேவதா ஆபோ
## பூர்புவஸ்ஸுவராப: ஓம் ||
ஆயாந்து ஶ்ரீ துர்கா லக்ஷ்மீயுக்தாம் ஸரஸ்வதீ தேவீம்
பூஜார்த்தம் துரித-க்ஷயகாரகா: ||

